செய்தி வெளியீடு எண்.123 நாள்.27.02.2017

**திருவள்ளூர் மாவட்டம். மாவட்டம் விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலகம் மூலமாக வளைகோல் பந்து பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருவள்ளூர் பிரிவில், விளையாட்டுத் திறமைகளைக் கண்டறிந்து பயிற்சியளிக்கும் திட்டத்தின் (Talent Hunting Camp) கீழ், வளைகோல் பந்து தேர்வு போட்டிகள், (Hockey Selection Trials) 02.03.2017 அன்று காலை 8.00 மணியளவில், திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த விளையாட்டரங்கத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்கண்ட தேர்வு போட்டியில் கலந்து கொள்ள வயது 14க்குள் இருத்தல் வேண்டும். இதில் மாணவ, மாணவியர்கள் மற்றும் மாணவர்கள் அல்லாதோரும் கலந்து கொள்ளலாம். தேர்வு போட்டிக்கு வரும் போது வயது சான்றிதழாக பிறப்பு சான்றிதழ் அவசியம் கொண்டு வருதல் வேண்டும். தேர்வில் கலந்து கொள்பவர்கள் தக்க சீருடை அணிந்து வருதல் அவசியமானது. மேலும் அவரவர் சொந்த வளைகோல் பந்துமட்டை எடுத்து வருதல் வேண்டும். தேர்வுப் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு தினப்படி மற்றும் பணயப்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படமாட்டாது என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~